மதுரையில் இன்று நடைபெறவிருக்கும் பொதுக்குழுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. பார்வையிட்டார். உடன் மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் ஆகியோர் உள்ளனர்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ள வரலாறு படைக்கும் கழக மாநில பொதுக்குழு கூட்டத்திற்கான பிரம்மாண்ட ஏற்பாடுகளின் இறுதி கட்டப் பணிகளை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், வடக்கு மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

எல்சா 3 கப்பல் விபத்து: தமிழ்நாட்டின் தென் கடலோர மாவட்டங்களில்

கடற்கரைப் பகுதிகளில் ஒதுங்கும் பிளாஸ்டிக் பொருட்கள் - இதர பொருட்கள் அகற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

சென்னை, ஜூன் 1-

எல்சா 3 கப்பல் விபத்தால் தமிழ் நாட்டின் தென் கடலோர மாவட்டங்களில் கடற்கரைப் பகுதிகளில் ஒதுங்கும் பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் இதர பொருட்களை அகற்ற மேற்கொள்ளப்பட்ட முன்னெச்ச ரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

தென்மேற்கு பருவ மழை தொடங்கிய நிலையில் கடந்த 24.05.2025 அன்று கேரள மாநில கடற்கரையில் 38 கடல் மைல் தொலைவில் எல்சா 3 என்ற கப்பல் விபத்துக்குள்ளாகி, அதிலி ருந்த எரிபொருள், பிளாஸ்டிக் துகள் கள், ஆபத்தான பொருட்கள் கொண்ட பெட்டகங்கள் கடலில் விழுந்தன. வலுவடைந்த தென் மேற்கு பருவ மழையின் காரண மாக பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங் கள் உட்பட பிற பொருட்கள் கேரள மாநிலத்தின் கடற்கரையிலும், கன் னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையிலும் கரை ஒதுங்கி வருகிறது.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யில்நேற்றுமுன்தினம்(30.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் நாட்டில் தென்கடலோர பகுதிகளில் ஒதுங்கும் பிளாஸ்டிக் துகள்கள் மற் றும் பிற பொருட்களால் பொதுமக்க ளுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாப்பான முறையில் அப்புறப் படுத்துதல், மீன்வளத்திற்கு ஏற்படக்கூ டிய பாதிப்பு மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், பிளாஸ்டிக் துகள்கள் கன்னியாகுமரி மாவட்டத் தின் மேற்கு கடற்கரையில் கரை ஒதுங்கியதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், எண்ணெய் பரவல் உள் ளதா எனவும், மீன்வளம் மற்றும் கடல்சார் உயிரினங்களுக்கு ஏதா வது பாதிப்பு ஏற்படுமா என்பது குறித் தும் முதலமைச்சர் அவர்கள் சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாள ரிடம் கேட்டறிந்தார்.

அதற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப் பாட்டு வாரிய வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது எனவும், கப்பல் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, பெட்டகங்களில் ஆபத்து விளைவிக் கக் கூடிய பொருட்கள் உள்ளதா என வும், இதனால் சுற்றுச்சூழலுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டால் அதனை திறம்பட எதிர்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுற் றுச் சூழல், காலநிலை மாற்றம் மற் றும் வனத்துறை கூடுதல் தலை மைச் செயலாளர் தெரிவித்தார். மேலும், தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய கட லோர நிலைத்திட்ட மேலாண்மை மையம், தேசிய கடல் ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக்கழ கம் ஆகியவற்றைச் சேர்ந்த அறிவி யல் வல்லுநர்களுடன் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள் ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவித் தார்.

அதனைத் தொடர்ந்து, கால்நடை, பால்வளம், மீன்வளம் மற்றும் மீன வர் நலத்துறை செயலாளர், கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் மீன்க ளுக்கு இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா எனவும், பிளாஸ்டிக் துகள்கள் மீன்கள் வயிற்றில் உள் ளதா என்பதை ஆய்வு செய்யவும், இப்பகுதி களில் மீன்பிடிக்கச் செல் வதை தவிர்க்குமாறும் மீன் வளத்து றையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்களுக்கும் மற்றும் தொடர்பு டைய அனைத்து அரசு துறையினருக்கும் பிளாஸ்டிக் துகள் களை அப்புறப்படுத்துவதற்கான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத் தால் வழங்கப்பட்டுள்ளது என்றும், ஊடகங்கள் மூலம் பிளாஸ்டிக் துகள் கள், பெட்டகங்கள் மற்றும் இதர பொருட்கள் கரை ஒதுங்குவதை தொடாமல் தவிர்க்குமாறும், உடன டியாக காவல்துறைக்குத் தெரிவிக்கு மாறும் அறிவுரைகள் வழங்கப்பட் டுள்ளது என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடு தல் தலைமைச் செயலாளர் அவர் கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், பிளாஸ்டிக் துகள் கள் மற்றும் பெட்டகங்கள் வானிலை சூழலுக்கேற்ப நகரும் திசை மற்றும் கரை ஒதுங்கக்கூடிய பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. பிளாஸ்டிக் துகள்களை அகற்ற தன்னார்வலர்கள் மூலம் பாதுகாப் பான முறையில் பணி மேற்கொள் ளப்பட வேண்டும் என்றும், காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரி களை ஒருங்கிணைத்து பணிகள் விரைவாக மேற்கொள்வதை உறுதி செய்யுமாறும், பாதுகாப்பு தொடர் பாக பொதுமக்களும் மீனவர்களும் பின்பற்றவேண்டிய நெறிமுறை களை வழங்குமாறும் மாவட்ட ஆட் சியர்களுக்கு முதலமைச்சர் அவர் கள் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், இந்நிகழ்வினால் சுற்றுச் சூழல் தாக்கம் குறித்த குறுகிய மற் றும் நீண்டகால ஆய்வுகளை மேற் கொள்ள வேண்டும் என்றும் மீன்வ ளத்துறையின் மூலமாக மீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் மீதான தாக்கத்தினை கண்டறிய ஆய்வினை துரிதப்படுத்த வேண் டும் என்றும் முதலமைச்சர் அவர் கள் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய நிலவரப்படி எவ்வித ஆபத்தான பொருட்களும் தமிழ்நாட் டின் கடற்கரையில் ஒதுங்கவில்லை. பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய பொருட் கள் கடலிலோ அல்லது கடற்கரை யிலோ கண்டறியப்பட்டால் உடனடி யாக மாவட்ட நிர்வாகத்திற்கும் காவல் துறைக்கும் தெரிவிக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு பேரி டர் மேலாண்மை ஆணையம் சூழ் நிலையை தொடர்ந்து கவனமாக கண்காணிக்க வேண்டும் என்றும், பொதுமக்களின் உயிர் மற்றும் வாழ் வாதாரத்தை பாதுகாப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகளும் அரசால் மேற்கொள் ளப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செய லாளர் நா.முருகானந்தம், சுற்றுச் சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண் மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, கால் நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வ ளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (31.05.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், 2025-26 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 91ன்படி, கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் செயல் திட்டத்தை மேம்படுத்தும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாமினை தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, கூடுதல் இயக்குநர்கள் மரு.பாலசந்தர், மரு.சித்ரா, இணை இயக்குநர் மரு.மீனாட்சி சுந்தரி மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், மருத்துவப் பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்-அனைத்துக் கிளைகளிலும்

முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர்அஞ்சலி!

கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன் 1-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் 3ஆம் தேதியை செம்மொழி நாளாக கொண்டாடிட வேண்டும் என்று அறிவித்த, தமிழக முதல் வர், கழகத்தலைவர் தளபதி அவர் களின் கட்டளையை ஏற்று, காஞ் சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் உள்ள கழக கொடி கம்பங்கள் முன்பு, ஜூன்3 அன்று காலை முத்தமிழறிஞர் கலைஞர் திருஉ ருவப் படத்தை வண்ண வண்ண மலர்களால் அலங்கரித்து வைத்து கழகத்தினர் அனைவரும், மலர் தூவி, மலர் அஞ்சலி செலுத்திட வேண்டுமென்றும், 41 ஆதரவற் றோர் இல்லங்களில் அன்று பகல் அறுசுவை உணவு வழங்கி செம் மொழி நாளாக கொண்டாடிட வேண்டும் என்றும், மாவட்ட செய லாளர் - அமைச்சர் தா.மோ.அன்ப ரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கை :

மறைந்தும், மறையாமல், தமிழக மக்களின் இதயங்க ளில் நீக்கமற நிறைந்திருக்கும் நம்முடைய உலக தமிழினத்தின் ஒப்பாரும் மிக்காரும் இல்லா தனிப் பெரும் தலைவர், பல இந் திய பிரதமர்களை யும், ஜனாதிபதிகளையும் உரு வாக்கி, இந்திய அரசியல் வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற பிதாமகன், திராவிட சூரியனாக திகழ்ந்த நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ஆம் தேதியை,

செம்மொழி நாளாக கொண்டாடிட வேண்டும் என்று, நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய ஒப் பற்ற தலைவர் தமிழ்நாடு முதல்வர் - தலைவர் தளபதி அவர்களின் அன்புக்கட்ட ளையை ஏற்று,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை, வருகிற ஜூன் 3ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட் டம் முழுவதும், கழக தொண்டர்களின் இல்ல விழாவாக - செம்மொழி நாளாக பட்டிதொட்டி யெங்கும் கோலகலமாக கொண்டாடப்பட உள்ளது.

நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இல்லா அன்புத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஜூன் 3ஆம் தேதி காலை 9.00 மணியள வில் மாவட்டம் முழுவதும் ஒன்றிய நகர பகுதி பேரூர் களில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழக கொடி தோரணங்களைக் கட்டி,

கழக கொடிக் கம்பங்கள் இ ரு க் கு மி ட ங் க ளி ல் முத்தமிழறிஞர் கலைஞர் திரு உருவப் படத்தை வண்ண வண்ண மலர்களால் அலங் கரித்து வைத்து, மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தி இனிப்புகளை வழங்கி, காஞ்சிபுரம் வடக்கு மாவட் டமே விழாக் கோலம் காணுகின்ற வகையில், நம் முடைய உயிரனைய தலை வர் முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் 102 - வது பிறந்தநாளை மிகவும் பிரம் மாண்ட மான முறையில் எழுச்சியுடன் கொண்டா டிட வேண்டும் என்று கேட் டுக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 41 முதியோர் இல்லம், கருணை இல்லம் பார்வை யற்றோர் பள்ளி - மாற்றுத் திறனாளிகள் தங்கும் இல் லம், மனநலம் குன்றியோர் தங்கும் விடுதி, தொழுநோ யாளிகள் இல்லம் ஆகியவற் றில் தங்கியுள்ள ஆதரவற் றோர்கள் அனை வருக்கும் ஜூன் 3ஆம் தேதி அன்று பகல் அறுசுவை உணவு வழங்க ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளது.

மேலும், கலைஞர் அவர் களின் 102வது பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழு வதும் இரத்ததான முகாம் மருத்துவ முகாம் கண் சிகிச்சை முகாம் நடத்துதல், மரக்கன்றுகளை நடுதல், ஏழை எளியவர்களுக்கு வேட்டி சேலை வழங்கு தல், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவியர்க ளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, கலைஞர் அவர்க ளின் 102வது பிறந்த நாள் விழாவை மிகவும் கோலாக லமான முறையில் கொண் டாட ஏற்பாடுகளை செய் துள்ளோம்.

தமிழகத்திற்கும் கழகத் திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழி னத்திற்காகவும் தமிழ் நாட்டு மக்களுக்காகவும் ஆற்றிய அரும்பெரும் சாத னைகளை விளக்கியும், தமி ழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் நல்லாட்சி நடத்தி இந்தியா வின் No.1 முதல்வர் என்ற வரலாற்று சாதனையை படைத்து,

கடந்த 4ஆண்டு பொற் கால ஆட்சியில் எண்ணில டங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்று, வெற்றி மகுடத்தில் நிலை நிறுத்தி சாதனை படைத்த சரித்தி ரத் தலைவர் தளபதி தலை மையிலான மக்கள் நலன் காக்கும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டுகால சாத னைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன் றிய - நகர -பகுதி - பேரூர் வாரியாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற் றும் கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடத் தப்பட உள்ளது.

இவ்வாறு அவர் அறிக் கையில் கூறியுள்ளார்.

பட்டுக்கோட்டை என்.சரவணன் தலைமையில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

குவைத் தளபதி பேரவை சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்!

காணொலி வாயிலாக அமைச்சர் சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

பூங்கோதை ஆலடி அருணா, எம்.எம்.அப்துல்லா வாழ்த்துரை!

ஃபஹாஹில் (குவைத்), ஜூன் 1-

அயலக திராவிட முன் னேற்றக் கழகம் குவைத் தளபதி பேரவை சார்பில், ஃபஹாஹில் ஷிஃபா அல் ஜசீரா மருத்துவமனையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் இலவச மருத் துவ முகாம், இப்பேரவை யின் தலைமை நிலையச் செயலாளர் உ.கு.சிவக்கு மார் வரவேற்புரையில் - செயலாளர் அம்மையப் பன் செல்வம், முதன்மைச் செயலாளர் மண்டலம் மதி வாணன், அமைப்புச் செய லாளர் பழனி நல்லரசு, கலை இலக்கிய அணிச் செயலா ளர் அருவி கவிஞர் ஆனந்த ரவி, கொள்கை பரப்புச் செயலாளர் அன்பழகன் ஆகியோர் முன்னிலையில்

தலைமை ஒருங்கிணைப் பாளர் பட்டுக்கோட்டை என்.சரவணன் தலைமை யில் நடைபெற்றது.

மருத்துவ முகாமை காணொலிக் காட்சி வாயி லாக தமிழ்நாடு சிறுபான் மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் ஆவடி சா. மு. நாசர் தொடங்கி வைத்தார்.

மாநிலங்களவை உறுப்பி னரும் கழக அயலக அணி யின் செயலாளருமான எம். எம். அப்துல்லா, முன்னாள் அமைச்சர் மாநில சுற்றுச் சூழல் அணியின் தலைவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இலவச மருத்துவ முகா மில் நூற்றுக்கும் மேற்பட் டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஷிஃபா அல் ஜசீரா மருத் துவக் குழுவினர் குணசீலன் பிள்ளை பொது மேலாளர், ஷிஃபா அல் ஜசீரா மருத் துவ மையம், ஃபஹாஹீல்,

ஜெயகிருஷ்ணன், மருத்துவ இயக்குனர், டாக்டர்.டேனியல் தேவபி ரசாத் இன்டர்னிஸ்ட், பிபி தனனன் மருத்துவர், எலும் பியல் நிபுணர்,

சபிதா கண் மருத்துவர், வெங்கடேஷ் கண் மருத்து வர்,சனி மோல் பொது மருத்துவர், பிரபுராஜ் பல் மருத்துவர், ஆஷா ஆகி யோர் மருத்துவ முகாமில் பல்வேறு சிகிச்சைகள் வழங் கினர்.

கழகத்தின் மூத்த முன் னோடிகள், குவைத்தில் பணிபுரியக்கூடிய பணியா ளர்கள் என மருத்துவ முகா மில் நூற்றுக்கும் மேற்பட் டோர் பயனடைந்தனர்.

முருகன், சிவ ராமன்,சாமிநாதன், பால் ராஜ் , ராமன், ஜியாவுதீன், அன்வர், முகமது கனி, கூட் டணிக் கட்சிகளான ம. தி.மு.க., மணிவாசகம், காங் கிரஸ் கட்சி செல்வேந்தி ரன்,வி.சி.க .மகிழன் செல் லத்துரை, ம.ம.க. லத்தீப் கம்ருதீன்,ம.ஜ.க. சதக்கத் துல்லா அன்சாரி இந்திய கம் யூனிஸ்டு கட்சி மன்னை ராஜேந்திரன்,

ஓட்டுனர் சேவை மையம் சையது ஜாபர், தமிழ் மக்கள் சேவை மையம் அலிபாய் ரசீது சமூக ஆர்வ லர் கொடுந்துறை அலிபாய் ரிஸ்வான் சத்திரமனை அசன் முகமது முபாரக் ஸ்டீபன் அமீர் ஜான் தமி ழர்கள் ஓட்டுனர் சேவை மையம் ஆரிப் உசேன்,பாண் டியன் குவைத் கிறிஸ்துவ திருச்சபையின் தலைவர் ஜான் ரமேஷ் கிளாட்வின் பாக்யராஜ் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள், கூட் டணிக் கட்சிகளின் நிர்வாகி கள், தமிழ் அமைப்பின் பிர திநிதிகள் என கலந்து கொண்ட அனைவருக்கும் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கப்பட்டது.

இறுதியாக அமைப்பா ளர் போத்தியப்பன் நன்றி கூறினார்.

சவுதி அரேபியாவை சார்ந்த தமிழ் சங்க நிர்வாகிகள், சேலம் சிக்கந்தர், திருச்சி ஆரிப் மக்பூல், மயிலாடுதுறை வெங்கடேசன், பிரான்ஸ் நாட்டு தமிழ் சங்கத்தை சேர்ந்த ஜெகன்நாதன் உள்ளிட்டோர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசரிடம் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து, தமிழ்நாடு அரசு, வெளிநாடு வாழ் தமிழர் நலனில் மேற்கொண்டுவரும் திட்டங்களுக்காக தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர். உடன் சிறுபான்மையினர் நல ஆணைய துணை தலைவர் இறையன்பன் குத்துஸ் உள்ளார்.